கொடைக்கானல் நகராட்சி

1920ஆம் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம், அட்டவணை III-ன் பிரிவு 2-ன் கீழ்16.02.2024 ஆம் நாள் வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணிக்கு நகர்மன்றத்தின் சாதாரணக் கூட்டம் நகர்மன்றக் கூடத்தில் நடைபெறும். அது சமயம் அனைத்து நகர்மன்ற உறுப்பினர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

ஒம்/-பா.செல்லத்துரை,
நகர்மன்றத் தலைவர்,
கொடைக்கானல் நகராட்சி.

நாள்.13.02.2024

**பொருள் எண் – 1)**

அரசாணை (நிலை) எண்.114 வருவாய் (நி.மு.5(1)துறை நாள்.28.2.2011ன்படி, நகர்மன்றத் தீர்மானம் எண்.538 நாள்.11.9.2023ன்படி, தீர்மானம் நிறைவேற்றப்பட்டு இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.8813/2012/எப்1, நாள்.22.9.2023ன் மூலம் வட்டாட்சியர், கொடைக்கானல் மற்றும் இவ்வலுவலக கடிதம் எண்.8813/2012/எப்1, நாள்.23.9.2023 மூலம் மாவட்ட ஆட்சியர் திண்டுக்கல் அவர்களுக்கும், எதிர்வரும் கோடைகால சீசனை முன்னிட்டு போக்குவரத்து நெரிசலை தவிர்க்கும் பொருட்டு சுற்றுலா பயணிகள் மற்றும் பொது மக்களின் நலன் கருதியும் கீழ்க்கண்ட வருவாய் துறைக்கு சொந்தமான இடங்களில் நிரந்தர கட்டுமானமின்ற திறந்தவெளி வாகன நிறுத்தம் ஏற்படுத்திட அரசாணையில் தெரிவித்துள்ளபடி, கொடைக்கானல் நகராட்சிக்கு நிலக்கிரையமின்றி நில உரிமை மாற்றம் செய்து அனுமதி அளித்திட உரிய உத்தரவு வழங்க தெரிவித்து கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் வட்டாட்சியர், கொடைக்கானல் அவர்களின் கடிதம் ந.க.எண்.3230/2023/ஆ1, நாள்.06.12.2023-ம் தேதிய கடிதத்தில், கீழ்க்கண்ட இடங்களில் திறந்த வெளி வாகன நிறுத்தம் ஏற்படுத்த கொடைக்கானல் நகராட்சிக்கு நில உரிமை மாற்றம் செய்ய ஆட்சேபனையில்லா தீர்மானம் இயற்றித்தர தெரிவிக்கப்பட்டுள்ளது.

| வ.எண் | இடம் | புல எண். | பரப்பளவு (ஏக்கரில்) | நில வகைபாடு |
|---|---|---|---|---|
| 1 | செண்பகனூர் மியூசியம் அருகில் | வார்டு-டி<br>பிளாக்-13<br>T.S.No.-69/1 | 14.38 | அரசு புறம்போக்கு |
| 2 | ரோஸ் பூங்கா மற்றும் அப்ஸர்வேட்டரி அருகில். | வார்டு-ஏ<br>பிளாக்-4<br>T.S.No.-44 | 0.92 | அரசு புஞ்சை |
| 3 | பசுமை பள்ளத்தாக்கு மற்றும் கோல்ப் கிளப் மைதானம் அருகில் | வார்டு-ஏ<br>பிளாக்-8<br>T.S.No.-10 | 8.00 | அரசு புஞ்சை |
| 4 | கோக்கர்ஸ்வாக் சுற்றுலாத்தலம் அருகில் | வார்டு-பி<br>பிளாக்-44<br>T.S.No.-1 | 30,62 | அரசு புறம்போக்கு |
| 5 | வட்டகானல்-டால்பின் நோஸ் சுற்றுலாத்தலம் அருகில். | வார்டு- பி<br>பிளாக்-18<br>T.S.No.-1/1 | 70.34 | அரசு புறம்போக்கு |
| 6 | குறிஞ்சி ஆண்டவர் கோவில் | வார்டு-சி<br>பிளாக்-16<br>T.S.No.-3 | 3.95 | அரசு புஞ்சை |
| 7 | வட்டக்கானல் | வார்டு-பி<br>பிளாக்-19<br>T.S.No.-1 | 0.84 | அரசு புறம்போக்கு |
| 8 | வட்டக்கானல் | வார்டு-பி<br>பிளாக்-18<br>T.S.No.-6 | 8.15 | அரசு புஞ்சை |

மேற்காணும் கொருள் தொடர்பாக எதிர்வரும் கோடைகால சீசனை முன்னிட்டும், போக்குவரத்து நெரிசலை தவிர்க்கும் பொருட்டும் சுற்றுலா பயணிகள் மற்றும் பொது மக்களின் நலன் கருதி மேற்கண்ட வருவாய் துறைக்கு சொந்தமான 8 இடங்களில் நிரந்தர கட்டுமானங்களின்றி திறந்தவெளி வாகன நிறுத்தம் ஏற்படுத்திட கொடைக்கானல் நகராட்சிக்கு நிலக்கிரையமின்றி நில உரிமை மாற்றம் செய்து அனுமதி அளித்திட உரிய உத்தரவு வழங்க நகராட்சிக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை என தீர்மானம் நிறைவேற்றி வட்டாட்சியர், கொடைக்கானல் அவர்களுக்கு அனுப்பி வைக்க மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு - அனுமதிக்கலாம். (ந.க.எண்.8813/2012/எப்1)

| | |
|---|---|
| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **634, நாள். 16.02.2024** |
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண் – 2)**

திரு.எப்.ஜெயபிரகாஷ் என்பவர், டர்னர்புரம் 1வது தெருவில் திரு.எம்.சபீக்ராஜா என்பவர் அனுமதியற்ற கட்டுமானம் கட்டிவருவதாக தடுத்த நிறுத்த கோரி சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் வழக்கு எண்.W.P.(MD)No.21550 of 2017 மூலம் ஆணையாளரை பிரதிவாரியாக சேர்க்கப்பட்டு வழக்கு தொடர்ந்துள்ளார்.

மேற்கண்ட வழக்கானது சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை இந்நகராட்சி நிலை வழக்கறிஞர் திரு.டி.எஸ்.முகமது முகைதீன் அவர்களால் ஆஜராகி நடத்தப்பட்டு வருகிறது.

வழக்கறிஞரின் 22.9.2023ம் தேதிய கடிதத்தில், வழக்கில் ஆஜராகி நடத்திய வகையில் ரூ.5000/- (ஐந்தாயிரம் மட்டும்) வழங்ககோரி தெரிவித்துள்ளார்.

மேற்கண்ட தொகையை வழங்கறிஞருக்கு நகராட்சி வருவாய் நிதியில் இருந்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு – அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **635, நாள். 16.02.2024** |
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண் – 3)**

திரு.டி.பிரபு ஆனந்தகிரி 7வது தெரு, கொடைக்கானல் என்பவர் அனுமதிக்கு மாறாக வணிக உபயோக கட்டிடம் கட்டியுள்ளதற்கு, நீதிமன்ற உத்தரவுப்படி பூட்டி சீலிடப்பட்டது. பூட்டி சீலிடப்பட்ட கட்டிடத்தை திறந்துவிடு கோரி நகராட்சியை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் வழக்கு எண்.C.R.P (PD)(MD)No.2191 of 2017 and C.M.P.(MD)No.10767 of 2017 மூலம் ஆணையாளரை மூன்றாம் பிரதிவாதியாக சேர்க்கப்பட்டு வழக்கு தொடர்ந்துள்ளார்.

மேற்கண்ட வழக்கானது சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை இந்நகராட்சி நிலை வழக்கறிஞர் திரு.டி.எஸ்.முகமது முகைதீன் அவர்களால் ஆஜராகி நடத்தப்பட்டு வருகிறது.

வழக்கறிஞரின் 22.8.2023ம் தேதிய கடிதத்தில், வழக்கில் ஆஜராகி நடத்திய வகையில் ரூ.7500/- (ஏழாயிரத்தி ஐநுறு மட்டும்) வழங்ககோரி தெரிவித்துள்ளார்.

மேற்கண்ட தொகையை வழங்கறிஞருக்கு நகராட்சி வருவாய் நிதியில் இருந்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு – அனுமதிக்கலாம். (க.ம.எண்.104/2015/எப்1)

| | |
|---|---|
| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **636, நாள். 16.02.2024** |
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண் – 4)**

அரசாணை எண்.105, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழுங்கல்துறை (MA-5) நாள்.26.06.2009-ன் பிரகாரம், கொடைக்கானல் சர்வே வார்டு-B. பிளாக்-30, நகரளவு எண்-3, R.S.No.234-ல் அமைந்துள்ள கொடைக்கானல் ஏரியின் உரிமை முழுமையாக கொடைக்கானல் நகராட்சிக்கு வழுங்கப்பட்டது.

அரசாணை எண்.165, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழுங்கல் துறை (MA-V(i). நாள்.16.11.2022 மூலம் கொடைக்கானல் ஏரியில் படகுகளை இயக்குவதற்கு, கொடைக்கானல் ஏரியில் படகு இயக்குதல் (முறைப்பபடுத்துதல்) துணை விதிகள் 2022-ஐ அங்கீகரித்து, மேற்படி துணை விதிகளை திண்டுக்கல் மாவட்ட அரசிதழ் எண்.7, நாள்.24.11.2022-ல் பிரசுரம் செய்யப்பட்டது. மேற்படி துணை விதிகள் 25.02.2023 முதல் அமுலுக்கு வந்துள்ளது.

(1) விதிகளில் குறிப்பிடப்படும் ஷரத்துகள் பிரசுரம் நகராட்சி செயல்பட வேண்டியது கடமையாகும்.
விதி 2 (e) :-Competant authority – தகுதியான அதிகாரமிக்கவர் என கொடைக்கானல் நகராட்சி ஆணையாளர் குறிப்பிடப்படுகிறார்.

விதி 2 (I) :- Undertaking authority – அதிகாரத்தை மேற்கொள்பவர் என Tamil Nadu Tourism Corporation -தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கழகம் காட்டப்பட்டுள்ளது.

இந்நிலையில் செயலாளர் போட் அன்டு ரோயிங் கிளப் நிறுவனம் கொடைக்கானல் ஏரியில் படகுகளை இயக்குவதற்கு, கொடைக்கானல் ஏரியில் படகு இயக்குதல் (முறைப்பபடுத்துதல்) துணை விதிகள் 2022-ஐ மறு பரிசீலனை செய்ய வழக்கு எண்.W.P.(MD)No.7479 of 2023-ன் மூலம் வழக்கு தொடர்ந்து ஆணையாளரை மூன்றாம் பிரதிநிதியாக சேர்த்து வழக்கு தொடரப்பட்டுள்ளது.

மேற்கண்ட வழக்கானது சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை இந்நகராட்சி நிலை வழக்கறிஞர் திரு.டி.எஸ்.முகமது முகைதீன் அவர்களால் ஆஜராகி நடத்தப்பட்டு வருகிறது. வழக்கறிஞரின் 20.7.2023-ம் தேதிய கடிதத்தில், வழக்கில் ஆஜராகி நடத்திய வகையில் ரூ.15000/-(பதினைந்தாயிரம் மட்டும்) வழங்ககோரி தெரிவித்துள்ளார். மேற்கண்ட தொகையை வழங்கறிஞருக்கு நகராட்சி வருவாய் நிதியில் இருந்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு – அனுமதிக்கலாம். (ந.க.எண்.2383/2007/எப்1)

| | |
|---|---|
| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **637, நாள். 16.02.2024** |
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண் – 5)**

நமது தமிழக முதல்வரின் முகவரி துறை சார்பில் மக்களுடன் முதல்வர் எனும் புதிய திட்டம் வருகின்ற 22.11.2023ம் தேதி முன்னோடி திட்டமாக நமது கொடைக்கானல் நகராட்சியில் துவங்கப்படவுள்ளது. இந்த முன்னோடி திட்டத்தின் சிறப்பு முகாமில் நகராட்சி துறை உள்ளிட்ட பிற துறைகள் பங்கேற்கவுள்ளன. மக்களுடன் முதல்வர் சிறப்பு முகாம் நடைபெறும் இடம் அரசு மேல்நிலைப்பள்ளி, லாஸ்காட் ரோடு நாள்.22.11.2023ம் தேதி புதன்கிழமை, நேரம் காலை 9.00 மணி முதல் பிற்பகல் 3.00 மணி வரை நடைபெறும் நிகழ்வுகள் நகராட்சியின் மூலம் அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்படவுள்ளதால் அதற்கான உத்தேச செலவினம் ரூ.3,50,000/- மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று செலவினம் மேற்கொள்வதை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.1316/2023/எச்1)
3.

| | |
|---|---|
| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **638, நாள். 16.02.2024** |
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண் – 6)**

இந்நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவில் பிறப்பு இறப்பு பதிவு படிவங்கள் சான்றிதழ்கள் கீழ்காணும் விவரப்படி அனுமதி பெற்ற அரசு பதிப்பகத்தில் அச்சடித்து வழங்க

| | | |
|---|---|---|
| 1 | உயிருள்ள பிறப்பு பற்றிய அறிக்கை<br>(Live Birth Reports Form 01) | 3000 Nos |
| 2 | இறப்பு பற்றிய அறிக்கை<br>(Death Reports Form-02) | 2000 Nos |
| 3 | மருத்துவ சான்றிதழ் நகல்<br>(Cause of Death Form -04) | 500 Nos |
| 4 | மருத்துவ சான்று நகல் Form -04A | 1500Nos |

மேற்கண்ட படிவங்கள் பொதுசுகாதாரம் அவசரம் கருதி அச்சடித்து வழங்குவதற்கு உத்தேச செலவினம் ரூ.20,000/-க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்வதற்கும், இச்செலவினத் தொகையை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்வதை மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.2371/2019/எச்1)

| | |
|---|---|
| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **639, நாள். 16.02.2024** |
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண் – 7)**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பொது இடங்களில் பிரதான சலைகளில் பொதுமக்களுக்கும், போக்குவரத்திற்கும், சுற்றுலா பயணிகளுக்கும் இடையூறாக உள்ள மாடுகளை அப்புறப்படுத்தவும் மாடுகளை பிடித்து கொட்டகையில் அடைத்து வைத்து மாட்டின் உரிமையாளருக்கு அபராதம் விதித்து நடவடிக்கை மேற்கொள்ளுமாறு ஆட்டோ ஒலிபெருக்கி மூலம் வார்டு எண்.1 முதல் 24 வரை இரண்டு நாட்கள் (06.12.2023, 07.12.2023) மட்டும் பொது அறிவிப்பு செய்து விழிப்புணர்வு ஏற்படுத்த உத்தேச செலவினத் தொகை ரூ.8000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்வதற்கும், இச்செலவினத்தொகையை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்வதை மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1483/2023/எச்1)

| | |
|---|---|
| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **640, நாள். 16.02.2024** |
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண் – 8)**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 24 வார்டு பகுதியில் டெங்கு கொசுபுழு ஒழிப்பு மற்றும் தொற்று நோய்கள் தடுப்பு பணிகள் மேற்கொள்ளும் பணிக்கு வெளிக்கொணர்வு முறையில் 30 பணியாளர்களை கொண்டு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போது திரு.கண்ணா டிரேடர்ஸ், சென்னை என்ற ஒப்பந்ததாரருக்கு நகர்மன்றம் அனுமதி பெற்று அதே விலை விகிதத்தில் 16.10.2023 முதல் 15.12.2023 வரை துப்புரவுப் பணியாளர்களை கொண்டு தூய்மைப் பணி மேற்கொண்ட வகையில் அன்னாருக்கு பணிநீட்டிப்பு காலம் முடிவுற்ற நிலையில் உள்ளதால் மீண்டும் 16.12.2023 முதல் 15.12.2024 வரை பணிநீட்டிப்பு வழங்குவதற்கும் டெங்கு ஒழிப்பு பணிகள் மேற்கொள்வதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணிநீட்டிப்பு செய்து தொடர் செலவினம் மேற்கொள்வதை மன்றம் ஏற்கலாம்.
(ந.க.எண்.380/2023/எச்1)

| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **641, நாள். 16.02.2024** |
|---|---|
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண் – 9)**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உலக கழிப்பறை தினத்தை முன்னிட்டு 2023 நவம்பர் 19 முதல் டிசம்பர் 25 வரை " Clean Toilet Campaign " மற்றும் " Clean Toilet Challenge " க்காக கழிப்பறை பயன்பாடு குறித்து மகளிர் சுயஉதவிக்குழு மூலம் ஆய்வு செய்து தர நிர்ணயம் செய்ய தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி இத்துடன் பட்டியலில் கண்ட மகளிர் சுயஉதவிக்குழு உறுப்பினர்கள் தங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட வார்டுகளில் உள்ள அனைத்து சமுதாய / பொது கழிப்பறைகளை ஆய்வு செய்யப்படவுள்ளதால் அதற்கான உத்தேச செலவினம் ரூ.35,000/- மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று செலவினம் மேற்கொள்வதை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.215/2023/எச்1)

| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **642, நாள். 16.02.2024** |
|---|---|
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண் – 10)**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 24 வார்டு பகுதியில் உள்ள அரசு மற்றும் நகராட்சி பள்ளிகளில் உள்ள கழிப்பறைகள் மற்றும் பள்ளி வளாகம் சுத்தம் செய்யும் பணிக்கு வெளிக்கொணர்வு முறையில் தூய்மைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போது திரு.P.சுரேஷ்குமார் என்ற ஒப்பந்ததாரருக்கு நகர்மன்றம் அனுமதி பெற்று அதே விலை விகிதத்தில் 12.07.2023 முதல் 31.12.2023 வரை துப்புரவுப் பணியாளர்களை கொண்டு தூய்மைப் பணி மேற்கொண்ட வகையில் அன்னாருக்கு பணிநீட்டிப்பு காலம் முடிவுற்ற நிலையில் உள்ளதால் மீண்டும் 01.01.2024 முதல் 31.12.2024 வரை பணிநீட்டிப்பு வழங்குவதற்கும் தூய்மைப் பணிகள் மேற்கொள்வதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணிநீட்டிப்பு செய்து தொடர் செலவினம் மேற்கொள்வதை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.811/2023/எச்1)

| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **643, நாள். 16.02.2024** |
|---|---|
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண் – 11)**

நமது தமிழக முதல்வரின் முகவரி துறை சார்பில் மக்களுடன் முதல்வர் எனும் புதிய திட்டம் 18.12.2023, 19.12.2023, 20.12.2023, 21.12.2023, 22.12.2023 மற்றும் 26.12.2023ம் தேதி நமது கொடைக்கானல் நகராட்சியில் நடைபெறவுள்ளது. இந்த திட்டத்தின் சிறப்பு முகாமில் நகராட்சி துறை உள்ளிட்ட பிற துறைகள் பங்கேற்கவுள்ளன. மக்களுடன் முதல்வர் சிறப்பு முகாம் கீழ்கண்டவாறு

| வ. எண் | தேதி | வார்டு எண்கள் | முகாம் நடைபெறும் இடங்கள் |
|---|---|---|---|
| 1 | 18.12.2023 | 4, 5, 6 | P.C.K. மேல்நிலைப்பள்ளி, நாயுடுபுரம் |
| 2 | 19.12.2023 | 1, 2, 3, 9, 10 | அப்சர்வேட்டரி நகராட்சி பள்ளி, அப்சர்வேட்டரி |
| 3 | 20.12.2023 | 7, 13, 14 | அரசு மேல்நிலைப்பள்ளி லாஸ்காட்ரோடு |
| 4 | 21.12.2023 | 15, 16, 19, 20 | அரசு மேல்நிலைப்பள்ளி லாஸ்காட்ரோடு |
| 5 | 22.12.2023 | 22, 23, 24 | குழந்தைஇயேசு ஆலயம் மண்டபம், கார்மேல்புரம் |
| 6 | 26.12.2023 | 8, 11, 12 | ஜெயராஜ் ஹால், உட்வில் ரோடு |

மேற்கண்ட இடங்களில் நடைபெறும் நிகழ்வுகள் நகராட்சியின் மூலம் அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்படவுள்ளதால் அதற்கான உத்தேச செலவினம் ஒரு முகாமிற்கு ரூ.4,00,000/- வீதம் ஆறு முகாம்களுக்கு ரூ.24,00,000/- மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று செலவினம் மேற்கொள்வதை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.1316/2023/எச்1)

| | |
|---|---|
| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **644, நாள். 16.02.2024** |
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண் – 12)**

இந்நகராட்சியின் நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமுதி நாள்.04.12.2023ன்படி பொதுசுகாதாரப் பிரிவிற்கு தேவையான இரட்டை கொள்கலன்கள் (TWIN BIN) 40 எண்ணம் விநியோகம் செய்யும் பணிக்கு 20.12.2023ஆம் தேதியன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பொருட்கள் விபரம் | MRR SUPPLIERS, CHENNAI | SB & CO, CHENNAI |
|---|---|---|---|
| | | எண்ணம் 1க்கு | |
| 1. | பொதுசுகாதாரப் பணிக்கு தேவையான இரட்டை கொள்கலன்கள் (TWIN BIN) 40 எண்ணம் | ரூ.24544/- | ரூ.24662/- |

அலுவலக குறிப்பு: 1. வ.எண்.1ல் MRR SUPPLIERS, CHENNAI என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.
2. அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.1478/2023/எச்1)

| | |
|---|---|
| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **645, நாள். 16.02.2024** |
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண் – 13)**

இந்நகராட்சி 24 வார்டுகளையும் 10043 குடியிருப்புகளையும் மற்றும் 44288 அளவிலான மக்கள் தொகையை கொண்ட நகராட்சியாகும். மேலும் இந்நகராட்சி சர்வதேச சுற்றுலா பயணிகளும், சனி மற்றும் ஞாயிறு விடுமுறைகள் பள்ளி கல்லூரி விடுமுறை நாட்களில் 50,000 முதல் ஒரு லட்சத்திற்கும் அதிகமான சுற்றுலா பயணிகளும் ஏப்ரல், மே மாதங்களில் இதை விட அதிகமாக சுற்றுலா பயணிகளும் அது தொடர்பான வியாபாரிகளும் அதிக அளவில் வந்து செல்கின்றனர். மேலும் ஒரு நாள் 1க்கு 19 மெட்ரிக்டன் 21 மெட்ரிக்டன் வரையிலான திடக்கழிவுகள் நகராட்சி பகுதிகளில் உற்பத்தியாகின்றது இந்நகரின் முக்கிய சுற்றுலா தளங்களான நட்சத்திர ஏரி, கோக்கர்ஸ் வாக், பிரையண்ட் பார்க், பசுமை பள்ளத்தாக்கு, வெள்ளி நீர்வீழ்ச்சி ஆகிய பகுதிகளில் சுற்றுலா பயணிகள் அதிக அளவில் வருகை புரிந்து குப்பை கழிவுகளை பொது பாறைகளிலும், சாலை ஓரங்களிலும் அங்குள்ள கழிவு நீர் சாக்கடைகளிலும் வீசிவிட்டு செல்வதால் பொதுசுகாதாரம் மிகவும் பாதிப்படைவதால் பொருமக்களுக்கு அருவருக்கத்தக்க சூழ்நிலையும் உருவாகிறது. தூய்மை இந்தியா திட்டம் 2.0 மற்றும் திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2020 நகரங்களின் தூய்மைக்கான அழகு போட்டி மற்றும் குப்பை இல்லா நகரம் (Garbage Free City) திட்டத்தின் படியும் சுற்றுலா பயணிகள் அதிகம் கூடும் அளவில் உள்ள பகுதிகள், பேருந்து நிலையங்கள், பிரதான சாலைகள் அதிகம் உள்ள பகுதிகளிலும் மக்காத குப்பை, மக்கும் குப்பை என தனித்தனியாக பிரித்து தொட்டியில் போடும் பழக்கத்தினை பொதுமக்கள் மற்றும் சுற்றுலா பயணிகளிடையே பழக்கத்தையும் விழிப்புணர்வையும் ஏற்படுத்திட வேண்டும் என SBM Swaach Savatchan 2023 STAR RATING GFCல் குறிப்பிடப்பட்டு அதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனவே கீழ்குறிப்பிட்ட விபரப்படி இரட்டை கொள்கலன்கள் (TWIN BIN) அமைக்க,

| வ. எண் | வார்டு எண் | இரட்டை கொள்கலன்கள் வைக்கப்பட வேண்டிய இடங்கள் | எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | 1 | அப்சர்வேட்டரி முதல் ரோஸ்கார்டன் வரை | 5 |
| 2 | 4 | நாயுடுபுரம் முதல் வில்பாட்டி ரோடு வரை | 5 |
| 3 | 8, 11 | பேருந்துநிலையம் முதல் அண்ணாசாலை வரை | 12 |
| 4 | 15 | மூஞ்சிக்கல் முதல் காமராஜர் சாலை வரை | 5 |
| 5 | 11 | சலேத்மாதா கோயில் சர்ச் | 3 |
| 6 | 14 | குறிஞ்சி ஆண்டவர் கோயில் முதல் செட்டியார்பார்க் வரை | 5 |
| 7 | 9, 10 | பாம்பார்புரம் , வட்டக்கானல் | 5 |
| | | **மொத்தம்** | **40** |

மேற்குறிப்பிட்ட விவரப்படி இரட்டை கொள்கலன்கள் மொத்தம் 40 எண்ணம் வாங்குவதற்கு உத்தேச செலவினம் தொகை ரூ.9,90,000/-க்கு நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்வதற்கும், இச்செலவினத் தொகையை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்வதை மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1478/2023/எச்1)

| | |
|---|---|
| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **646, நாள். 16.02.2024** |
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண் – 14)**

இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவு திடக்கழிவு மேலாண்மை பணிகள் மற்றும் தூய்மை பணிகளுக்கு அத்தியாவசியமான தளவாட பொருட்கள் நகராட்சி நமது இருப்பில் இல்லாததால் பொது சுகாதாரப் பணிகள் மிகவும் பாதிப்படைகிறது. எனவே பொதுசுகாதார அவசர அவசியம் கருதி கீழ்குறிப்பிட்டுள்ள தளவாடப் பொருட்களை ஒப்பந்தப்புள்ளி மூலம் வாங்கி வழங்கிட

| வ.எண் | பொருட்களின் விபரம் | எண்ணம் |
|---|---|---|
| 1 | தென்னந்துடப்பம் | 450 |
| 2 | தெருகூட்டுமார் | 250 |
| 3 | மண்வெட்டி | 60 |
| 4 | கடப்பாரை | 20 |
| 5 | அரிவாள் | 50 |
| 6 | தொரட்டி அரிவாள் | 50 |
| 7 | மூங்கில் பிரஷ் | 60 |
| 8 | கால்வாய் கரண்டி | 60 |
| 9 | பிளாஸ்டி பிரஷ் | 50 |
| 10 | ப்ளோர் மாப் | 50 |
| 11 | இரும்பு வாளிகள்(5லிட்டர்) | 100 |
| 12 | கையோடு | 100 |
| 13 | பிக்காஷ் | 15 |
| 14 | 3 பல்கொக்கி | 50 |
| 15 | 5பல் கொக்கி | 50 |
| 16 | புல் அரிவாள் | 100 |
| 17 | சம்மட்டி | 10 |
| 18 | Toilet Brush | 50 |
| 19 | இரும்பு சட்டி | 50 |
| 20 | மண் அள்ளும் சவல் | 10 |

மேற்குறிப்பிட்ட விபரப்படி தளவாட சாமான்கள் வாங்கி வழங்கிட உத்தேச செலவினம் தொகை ரூ.5,00,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று செலவினம் மேற்கொள்வதை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.1507/2023/எச்1)

| | |
|---|---|
| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **647, நாள். 16.02.2024** |
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண் – 15)**

இந்நகராட்சிப் பகுதியில் அமைந்துள்ள ஊராட்சி ஒன்றியப் பணியாளர்களுக்கு தொழில்வரி செலுத்தக்கோரி ரூ.31250/- தணிக்கையில் தடை எழப்பப்பட்டுள்ளது. ஆனால், இந்த காலத்தில் 2021-22ல் பணிபுரிந்த பணியாட்களில் பலரும் வெளியூர் மற்றும் ஓய்வு பெற்றுவிட்டார்கள் என்று ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் (ந.க.எண்.2300/2023/அ1, நாள்.8.12.2023ல் தெரிவித்துள்ளார். அதன்படி வருவாய் ஆய்வரின் அறிக்கையின்படி ரூ.31250/-ஐ வஜா செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று ரூ.31250/-ஐ வஜா செய்ததை மன்றம் அங்கீகரிக்கலாம். (ந.க.எண்.1507/2023/எச்1)

| | |
|---|---|
| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **648, நாள். 16.02.2024** |
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண் – 16)**

இந்நகராட்சியின் நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி நாள்.12.12.2023ன்படி பொதுசுகாதாரப் பிரிவிற்கு தேவையான தளவாட பொருட்கள் விநியோகம் செய்யும் பணிக்கு 21.12.2023ஆம் தேதியன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பொருட்கள் விபரம் | P.K.AGENCIES | KANNA TRADERS |
|---|---|---|---|
| | | எண்ணம் 1க்கு | |
| 1 | தென்னந்துடப்பம் | 29.50 | 35.50 |
| 2 | தெருகூட்டுமார் | 280 | 292 |
| 3 | மண்வெட்டி | 475 | 480 |
| 4 | கடப்பாரை | 975 | 978 |
| 5 | அரிவாள் | 450 | 452 |
| 6 | தொரட்டி அரிவாள் | 290 | 293 |
| 7 | மூங்கில் பிரஷ் | 384 | 390 |
| 8 | கால்வாய் கரண்டி | 450 | 455 |
| 9 | பிளாஸ்டி பிரஷ் | 75 | 80 |
| 10 | ப்ளோர் மாப் | 300 | 308 |
| 11 | இரும்பு வாளிகள்(5லிட்டர்) | 298 | 300 |
| 12 | கையோடு | 115 | 118 |
| 13 | பிக்காஷ் | 650 | 492 |
| 14 | 3 பல்கொக்கி | 490 | 492 |
| 15 | 5பல் கொக்கி | 490 | 675 |
| 16 | புல் அரிவாள் | 115 | 118 |
| 17 | சம்மட்டி | 325 | 330 |
| 18 | Toilet Brush | 125 | 130 |
| 19 | இரும்பு சட்டி | 380 | 385 |
| 20 | மண் அள்ளும் சவல் | 382 | 385 |

அலுவலக குறிப்பு: வ.எண்.1ல் P.K.AGENCIES, THANJAVUR என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

| | |
|---|---|
| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **649, நாள். 16.02.2024** |
| | |
| **நகர்மன்றத் தீர்மானம்** : | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண் – 17)**

கொடைக்கானல் நகராட்சி பகுதியில் நடைபெற்றுவரும் திட்ட பணிகளை பராமரித்திட பராமரிப்பு மற்றும் தொழில்நுட்ப பணியாளர்களை ஒப்பந்ததாரர் மூலம் தற்காலிகமாக பணிக்கு அமர்த்திக் கொள்ள நகர்மன்ற தீர்மானம் எண். 551 நாள். 11.09.2023 ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன்படி இப்பணியினை மேற்கொள்வதற்கு 19.12.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பீட்டு அட்டவணை மன்றத்தின் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு இலட்சத்தில் | ஒப்பந்தக்காரரின் பெயர் (திருவாளர்கள்) | ஒப்பந்த சதவீதம் (மதிப்பீடு விகிதத்திற்கு ) |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | கீழ்குண்டாறு குடிநீர் திட்டம் – பராமரிப்பு மற்றும் தொழில்நுட்ப பணியாளர்கள் ஒப்பந்ததாரர் மூலம் தற்காலிகமாக நியமித்து பணிமேற்கொள்ளுதல் | 5.00 | எம்.கென்னடி<br>எம். பழனி | 0.15 % குறைவு<br>0.50%அதிகம் |

அலுவலக குறிப்பு : 1. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.
2. அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **650, நாள். 16.02.2024** |
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண் – 18)**

கொடைக்கானல் நகராட்சிக்கு சொந்தமான பசுமை பள்ளதாக்கு பகுதியில் ஆபத்தான நிலையில் உள்ள மரங்களை அப்புறப்படுத்திட கொடைக்கானல் உட்கோட்ட நிர்வாக நடுவர் மற்றும் வருவாய் கோட்டாட்சியர் அவர்களின் செயல்முறை கடிதம் எண். 1440/2023/அ5 நாள். 18.11.2023 ல் அனுமதி வழஙகப்பட்டுள்ளது. அதன்படி இம்மரஙகளின் அடிப்படை மதிப்பு மாவட்ட வன அலுவலர், கொடைக்கானல் அவர்களின் கடிதம் ந.க.எண். 9050/2023/டி நாள். 4.12.2023 ல் பெறப்பட்டு 20.12.2023 அன்று பொது ஏலம் நடத்தப்பட்டதில் கீழ்க்கண்ட விவரப்படி அதிகபட்ச ஏல கேள்விகள் கேட்கப்பட்டுள்ளது.

| வ. எண். | இடம் | மரத்தின் வகை | வனத்துறையின் அடிப்படை மதிப்பு ரூ. ( டன் ஒன்றுக்கு ) | உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி தொகை ரூ. (டன் ஒன்றுக்கு) |
|---|---|---|---|---|
| 1 | பசுமை பள்ளதாக்கு மில்உறவன் சாலை | குஙகுலிய பல்பு உட் கட்டைகள் | 303/– | 306/– |
| 2 | 1. குஙகுலிய மரஙகள் | குஙகுலிய தடிகள் | 1716/– | 1720/– |
| 3 | 2. சவுக்கு மரம் | சவுக்கு | 303/– | 309/– |

இதில் அதிகபட்ச ஏலக்கேள்வியானது வனத்துறையின் அடிப்படை மதிப்பினை விட கூடுதலாக உள்ளதால், அதிகபட்ச ஏலக்கேள்வி கோரியுள்ள திரு. ஆர். சிவக்குமார், த/பெ. ரஙகசாமி, கீழ்புதுக்காடு, கொடைக்கானல் அவர்களின் ஏலக்கேள்வியினை உறுதிச் செய்ய மன்றத்தின் அனுமதிக்கு

அலுவலக குறிப்பு.

1. வரிசை எண். 1, 2 மற்றும் 3 ல் கண்ட உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி கேட்டுள்ள திரு. ஆர். சிவக்குமார், த/பெ. ரஙகசாமி, கீழ்புதுக்காடு, கொடைக்கானல் அவர்களின் ஏலக்கேள்வித் தொகையினை உறுதி செய்து உத்தரவு வழஙக அனுமதிக்கலாம்.
2.

| | |
|---|---|
| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **651, நாள். 16.02.2024** |
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண் – 19)**

கொடைக்கானல் நகராட்சிக்கு சொந்தமான தலைமை நீர்த்தேக்கத்தில் உள்ள சுத்திகரிப்பு நிலையத்தில் குண்டாறு குடிநீர் பிரதான குழாயையும், சுத்திகரிக்கப்பட்ட நீரின் பிரதான குழாயினையும் இணைக்கும் பணி மேற்கொள்ள நகர்மன்ற தீர்மானம் எண். 607 நாள். 30.11.2023 ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன்படி இப்பணியினை மேற்கொள்வதற்கு 12.12.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பீட்டு அட்டவணை மன்றத்தின் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு இலட்சத் தில் | ஒப்பந்தக்காரரின் பெயர் ( திருவாளர்கள் ) | ஒப்பந்த சதவீதம் (மதிப்பீடு விகிதத்திற்கு ) |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | தலைமை நீர்த்தேக்கத்தில் உள்ள சுத்திகரிப்பு நிலையத்தில் குண்டாறு குடிநீர் பிரதான குழாயையும், சுத்திகரிக்கப்பட்ட நீரின் பிரதான குழாயினையும் இணைக்கும் பணி மேற்கொள்ளுதல் | 29.00 | M/s. Jupitor Enterprise, Erode<br><br>M/s.Sivaalik Rathinam Chemicals, Erode | 0.20% குறைவு<br><br>2.50 % அதிகம் |

அலுவலக குறிப்பு. 1) குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள M/s.Jupitor Enterpirse, Erode நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.
2) அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **652, நாள். 16.02.2024** |
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண் – 20)**

கொடைக்கானல் நகராட்சி பொறியியல் பிரிவு குடிநீர் பணிக்கு தேவையான Gas Chlorne & Sodium Hypo Chloride சப்ளை செய்திட நகர்மன்ற தீர்மானம் எண். 604 நாள். 30.11.2023 ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன்படி இப்பணியினை மேற்கொள்வதற்கு 12.12.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பீட்டு அட்டவணை மன்றத்தின் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு இலட்சத்தில் | ஒப்பந்தக்காரரின் பெயர் ( திருவாளர்கள் ) | ஒப்பந்த சதவீதம் (மதிப்பீடு விகிதத்திற்கு ) |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | கொடைக்கானல் நகராட்சி பொறியியல் பிரிவு குடிநீர் பணிக்கு தேவையான Gas Chlorne & Sodium Hypo Chloride சப்ளை செய்தல் | **20.00** | M/s. Jupitor Enterprise, Erode<br><br>M/s.Sivaalik Rathinam Chemicals, Erode | **0.15%** குறைவு<br><br>**2.00** % அதிகம் |

அலுவலக குறிப்பு. 1)குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள M/s.Jupitor Enterpirse, Erode நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.
2)அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **653, நாள். 16.02.2024** |
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண் – 21)**

கொடைக்கானல் நகராட்சி லாஸ்காட் சாலையில் அமைக்கப்பட்டுள்ள இயற்கை எரிவாயு நிலையத்தில் தேவையான ஜெனரேட்டர் மற்றும் இயந்திரங்களை சப்ளை செய்து பொருத்திட நகர்மன்ற தீர்மானம் எண். 596 நாள். 30.11.2023 ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன்படி இப்பணியினை மேற்கொள்வதற்கு 19.12.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பீட்டு அட்டவணை மன்றத்தின் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு இலட்சத்தில் | ஒப்பந்தக்காரரின் பெயர் ( திருவாளர்கள் ) | ஒப்பந்த சதவீதம் (மதிப்பீடு விகிதத்திற்கு ) |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | லாஸ்காட் சாலை இயற்கை எரிவாயு மையத்திற்கு தேவையான ஜெனரேட்டர் , பம்பு மோட்டார் மற்றும் இதர இயந்திரங்கள் பொருத்துதல் | **15.00** | M/s. Carbon Loops P ltd., Chennai<br><br>M/s. Mitti Cyecle, Chennai. | **0.16%** குறைவு<br><br>**4.15** % அதிகம் |

அலுவலக குறிப்பு. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

| | |
|---|---|
| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **654, நாள். 16.02.2024** |
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண் – 22)**

கொடைக்கானல் நகராட்சி பகுதியில் Geospatial Survey and Spatial mapping பணியினை மேற்கொள்வதற்கு **19.12..2023** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பீட்டு அட்டவணை மன்றத்தின் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு இலட்சத்தில் | ஒப்பந்தக்காரரின் பெயர் ( திருவாளர்கள் ) | ஒப்பந்த சதவீதம் (மதிப்பீடு விகிதத்திற்கு) |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| **1** | Geospatial Survey and Spatial mapping of water Pipe line | **9.00** | M/s. Hagrois, SS Nagar Extension, Thirumullaivail, Chennai<br><br>Nilam Foundation, Thiruvannamalai. | **0.50** % குறைவு<br><br>**1.50**%அதிகம் |

அலுவலக குறிப்பு. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **655, நாள். 16.02.2024** |
|---|---|
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண் – 23)**

மாவட்ட ஆட்சித் தலைவர், திண்டுக்கல் அவர்களின் கடிதம் ந.க.எண். **516664/2023/எல்.1** நாள். **14.11.2023** –ல் முதல்வரின் முகவரித்துறை மூலம் புதிய முயற்சியாக Service Delivery @ Door Steps என்ற திட்டம் அறிமுகப்படுத்தப்படவுள்ளது எனவும் இத்திட்டமானது மாவட்டத்திலுள்ள அனைத்து நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளுக்குட்பட்ட பகுதிகளுக்கு (இணைப்பில் கண்டுள்ள ) **10** முதல்நிலை அலுவலர்கள் சென்று சிறப்பு முகாம் நடத்த வேண்டுமென சென்னை தலைமைச் செயலாளர் அவர்களால் காணொலி ஆய்வு கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டுள்ளதை தொடர்ந்து திண்டுக்கல் மாவட்டத்தில் **22.11.2023** தேதியன்று கொடைக்கானல் நகராட்சி பகுதியில் இச்சிறப்பு முகாமானது நடத்திட தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, மாவட்ட ஆட்சித் தலைவர் , திண்டுக்கல் அவர்களின் கடிதம் ந.க.எண். **516664/2023/எல்.1** நாள். **14.11.2023** ன்படி, அரசு மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் உள்ள **டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி கலையரங்க** கட்டிடத்தில் அவசர அவசியம் கருதி மராமத்து பணிகள் மற்றும் வர்ணம் பூசும் பணிகள் **தமிழ்நாடு உள்ளாட்சி விதிகள் 2023 பிரிவு 56 ன்** கீழ் ரூ.6,40,504/– மதிப்பீட்டில் செய்து முடிக்கப்பட்டு, முகாம் நடத்தப்பட்டது என்ற விபரம் மன்றத்தின் பதிவிற்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு. மன்றம் பதிவு செய்யலாம்.

| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **656, நாள். 16.02.2024** |
|---|---|
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண் – 24)**

கொடைக்கானல் நகராட்சியின் வளர்ச்சி பணிகள் குறித்து நாளிதழ்களின் தொழில்மலரில் மாவட்ட ஆட்சித் தலைவர், திண்டுக்கல் அவர்களின் அனுமதியின்படி, விளம்பரம் வெளியிட்ட வகையில் கீழ்க்கண்டவாறு கீழ்க்கண்டவாறு பட்டியல் தொகை வழஙக கோரி நாளிதழ்களின் பட்டியல்கள் வரப்பெற்றுள்ளன.

| வ.எண். | விளம்பர நிறுவனத்தின் விபரம் | பட்டியல் எண் மற்றும் நாள் | தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | Trinity printers and Publishers Limited **(Trinity Mirror )** | MDUTAB232400138 DT 1.12.2023 | **34,650.00** |
| 2 | Theekathir Tamil Daily | MDU/594/23-24 DT 11.11.2023 | **20,000.00** |

மேற்கண்ட விவரப்படியான நாளிதழ் விளம்பர கட்டணங்கள் வழஙகிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு. 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அஙகீகரிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **657, நாள். 16.02.2024** |
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண் – 25)**

கொடைக்கானல் நகராட்சிக்கு உட்பட்ட கீழ்க்கண்ட பகுதிகளில் பொதுமக்கள் மற்றும் சுற்றுலா பயணிகளின் நலன் கருதி கீழ்க்கண்ட பணிகளை உடனடியாக செய்து முடித்திட வேண்டியுள்ளது. எனவே, கீழ்க்கண்ட பணிகளை மேற்கொள்வதற்கு பொது நிதி மற்றும் குடிநீர் நிதியின் கீழ் கீழ்க்கண்டவாறு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | பணியின் விபரம் | மதிப்பீடு ரூ.இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | புதுக்காடு பகுதியில் கான்கிரிட் சாலை அமைத்தல் | 10.00 |
| 2 | பாக்கியபுரம் சாலையில் மழை நீர் வாய்க்கால் மூடி மற்றும் தார்ச்சாலை அமைத்தல் | 15.00 |
| 3 | செல்லபுரம் பகுதியில் மழைநீர் வாயிக்கால் அமைத்தல் | 10.00 |
| 4 | காமராசர் தஙகும் விடுதி நகராட்சி குடியிருப்புகளுக்கு கழிப்பறை வசதி செய்தல் | 10.00 |
| 5 | அரசு மருத்துவமனை அருகில் லாஸ்காட் சாலையில் மழை நீர் வாய்க்கால் அமைத்தல் | 12.50 |
| 6 | சீனிவாசபுரம் ஆத்து மேடு பகுதியில் மழை நீர் வாய்க்கால் மற்றம் சிறு பாலம் அமைத்தல் | 9.00 |
| 7 | கருப்பசாமி கோயில் அருகில் வார்டு எண்.6, மழைநீர் வாய்க்கால் அமைத்தல். | 10.00 |
| குடிநீர் நிதி 2023–24 | | |
| 1 | மூஞ்சிக்கல் மாரியம்மன்கோயில் அருகில் உள்ள குடிநீர் தேக்க தொட்டி அருகில் மோட்டார் அறை மற்றும் நடைபாதை அமைத்தல் (W.No.18) | 10.00 |
| 2 | தலைமை நீர் தேக்கத்தில் சிறு தடுப்பணைகள் அமைத்தல் | 10.00 |
| 3 | தலைமை நீர்த்தேக்கத்தில் கீழ்குண்டாறு Rich Point சுற்றிலும் பாதுகாப்பு வேலி மற்றும் கழிப்பறை அமைத்தல் | 10.00 |
| 4 | அந்தோணியார் கோயில் தெருவில் குடிநீர் குழாய்கள் அமைத்தல் | 7.50 |
| 5 | அப்சர்வேட்டரி செம்மண் மேடு பகுதியில் குடிநீர் குழாய்கள் அமைத்தல் | 7.00 |
| 6 | இந்திரா நகர் பகுதியில் குடிநீர் குழாய்கள் அமைத்தல் | 6.50 |
| 7 | சத்தியாநகர் மற்றும் வசந்தா நகர் பகுதியில் குடிநீர் குழய்கள் அமைத்தல் | 9.00 |

தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு. அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **658, நாள். 16.02.2024** |
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண் – 26)**

கொடைக்கானல் நகராட்சி பகுதியில் பொது நிதியின் கீழ் பணிகள் மேற்கொள்வதற்கு ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிவிப்பினை மாநில அளவிலான தமிழ் நாளிதழில், செய்தி மற்றும் மக்கள் தொடர்பு அலுவலர், திண்டுக்கல் மூலம் அறிவிப்பு செய்த வகையில் நாளிதழ் கட்டணமாக கீழ்க்கண்ட விவரப்படி பட்டியல் தொகை செலுத்த கோரி பட்டியல் பெறப்பட்டுள்ளது.

| வ. எண். | பணியின் விபரம் | விளம்பர நிறுவனத்தின் விபரம் | பட்டியல் எண் மற்றும் நாள் | தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | பொது நிதி 2023–24 தினசரி அங்காடி கட்டிடத்தில் கூடுதல் பணிகள் மேற்கொள்ளுதல் | Tamilaka News | 19 dt 13.12.2023 | 15120/– |

மேற்கண்ட தொகையினை நாளிதழ் நிறுவனத்திற்கு பொது நிதியில் இருந்து வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு. அனுமதிக்கலாம்.

| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **659, நாள். 16.02.2024** |
|---|---|
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண் – 27)**

கொடைக்கானல் நகராட்சி அலுவலகத்தின் கீழ் தளம் மற்றும் மேல்தளத்தில் புதியதாக வயரிங, நெட்ஒர்க் கேபிள், மின் விளக்குகள். புதிய கணணிகள், கண்காணிப்பு கேமரா, VC hall camera and devies மற்றும் UPS வசதிகள் ஏற்படுத்திட 27.12.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பீட்டு அட்டவணை மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு இலட்சத் தில் | ஒப்பந்தக்காரரின் பெயர் (திருவாளர்கள்) | ஒப்பந்த சதவீதம் (மதிப்பீடு விகிதத்திற்கு ) |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | Supply and Installation of Network Devices and Its Accessories | 9.32 | M/s. Syscon Sytems, nerkundram,Chennai.<br>M/s. Sagar Electronics, Vallalar Street, Venkatesha Colony, Pollachi | 0.18% குறைவு<br>0.20% அதிகம் |
| 2 | Supply and fixing of CCTV camera, Viedo Conferenceing Devices and its Accessories | 19.45 | M/s. Sagar Electronics, Vallalar Street, venkatesha Colony, Pollachi<br>M/s. Syscon Sytems, nerkundram,Chennai. | 0.10 % குறைவு<br>2.42 % அதிகம் |
| 3 | Supply, delivery and installation of electrical Wiering , UPS wireing and LED Light wiring with earth connection | 19.89 | M/s. Syscon Sytems, nerkundram,Chennai.<br>M/s. Sagar Electronics, Vallalar Street, venkatesha Colony, Pollachi | 0.10 % குறைவு<br>1.45 % அதிகம் |
| 4 | Supply and fixing of Intercom devices, Desktop computers, Xerox Machine with its accessories | 19.75 | M/s. Sagar Electronics, Vallalar Street, venkatesha Colony, Pollachi<br>M/s. Syscon Sytems, nerkundram,Chennai. | 0.18 % குறைவு<br>1.31 % அதிகம் |
| 5 | Supply and Installation of UPS, Batteries and Related Accessories | 7.80 | M/s. Syscon Sytems, nerkundram,Chennai.<br>M/s. Sagar Electronics, Vallalar Street, venkatesha Colony, Pollachi | 0.11 % குறைவு<br>2.02% அதிகம் |

அலுவலக குறிப்பு. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்கலாம்.

| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **660, நாள். 16.02.2024** |
|---|---|
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

******

**பொருள் எண் – 28)**

கொடைக்கானல் நகராட்சி நகர்மன்றத் தீர்மானம் எண். 608 நாள். 30.11.2023 ல் அண்ணாசாலை தினசரி மார்க்கெட்டில் சுற்று சுவர், அலஙகார இனஙகள், முன்புற வடிவமைப்பு மற்றும் எழுத்துக்கள் மற்றும் இதர பணிகள் மேறகொள்வதற்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன்படி இப்பணியினை மேற்கொள்வதற்கு 28.12.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பீட்டு அட்டவணை மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு இலட்சத்தில் | ஒப்பந்தக்காரரின் பெயர் ( திருவாளர்கள் ) | ஒப்பந்த சதவீதம் (மதிப்பீடு விகிதத்திற்கு ) |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | கொடைக்கானல் நகராட்சி அண்ணாசாலை தினசரி அஙகாடியின் கிழக்கு பகுதியில் கூடுதல் அஙகாடி அமைத்தல் மற்றும் இதர பணிகள் மேற்கொள்ளுதல் | 56.00 | பி. அரசகுமார்<br>ஜி. சிவக்குமார் | 0.18% குறைவு<br>0.20% குறைவு |

அலுவலக குறிப்பு. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு பி. அரசகுமார் , ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

| | |
|---|---|
| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **661, நாள். 16.02.2024** |
| | |
| **நகர்மன்றத் தீர்மானம்** : | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண் – 29)**

நகராட்சி நிர்வாக இயக்குநர், நகராட்சி நிர்வாக இயக்குநரகம், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.19047/ஆர்2/2019 நாள்.26.12.2023 கடிதம் மூலம் வரப்பெற்ற அரசாணை (நிலை) எண்.252, வேளாண்மை உழவர் நலத் (வேவி3) துறை நாள்.21.11.2023-ல் வேளாண்மை-உழவர் நலத்துறை வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகம் உழவர் சந்தை மாநகராட்சி நகராட்சி மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு சொந்தமான நிலங்களில் செயல்பட்டு வரும் உழவர் சந்தைகளுக்கு கீழ்க்கண்ட விபரப்படி வாடகைத் தொகை நிர்ணயம் செய்து அரசாணை வரப்பெற்றுள்ளது.

ஆண்டொன்றிற்கு

| | | |
|---|---|---|
| 1 | பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதி | ரூ.30,000/- |
| 2 | இதர மாநகராட்சிப் பகுதிகள் | ரூ.25,000/- |
| 3 | நகராட்சிப் பகுதிகள் | ரூ.15,000/- |
| 4 | பேரூராட்சிப் பகுதிகள் | ரூ.10,000/- |
| 5 | ஊராட்சிப் பகுதிகள் | ரூ. 5,000/- |

மேற்கண்ட விபரப்படி வரப்பெற்றுள்ள அரசாணை விபரம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு – மன்றம் பதிவு செய்யலாம். (ந.க.எண்.7005/2007/எப்1)

| | |
|---|---|
| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **662, நாள். 16.02.2024** |
| | |
| **நகர்மன்றத் தீர்மானம்** : | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண் – 30)**

இந்நகராட்சியின் புரூட்டன் வளாகத்தில் உள்ள கட்டண கழிப்பறைக்கு 2.11.2020 முதல் 30.11.2023 வரை ஆண்டு குத்தகைக்கு உரிமம் வழங்கப்பட்டுள்ளது. திரு.ஆர்.பிலவேந்திரன் / ராமன் குத்தகைதாரர் கொரோனா ஊரடங்கு காலங்களில் கட்டண கழிப்பறை பூட்டி வைக்கப்பட்டிருந்த காரணத்தினால் நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக விவரம் தெரிவித்து மார்ச் மாதம் வரை (31.03.2024) குத்தகை உரிமத்தை நீட்டிப்பு செய்து வழங்குமாறு வேண்டியுள்ளார். அரசாணை எண்181 நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் துறை(நநி4)துறை நாள்.19.09.2008ன் படி ஆண்டு குத்தகையானது நிதியாண்டின் அடிப்படையிலேயே மூன்றாண்டு தொகுப்பு காலத்திற்கு குத்தகைக்கு விடப்பட வேண்டும். அதனடிப்படையில் 31.03.2024 வரை குத்தகை உரிமத்தை அன்னாருக்கு காலநீடிப்பு செய்து வழங்கவும் அதனை தொடர்ந்து அடுத்த நிதியாண்டிற்கு 1.4.2024 முதல் பொது ஏலம் /ஒப்பந்தப்புள்ளி கோரி குத்தகை உரிமம் ஒப்படைப்பு செய்யவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>**அலுவலக குறிப்பு**</u>

1.மேற்காணும் குத்தகை இனத்திற்கு குத்தகை காலம் 30.11.2023ல் முடிவடைந்த காரணத்தினால் துறை மூலம் வசூல் பணி மேற்கொள்ள போதிய பணியாளர்கள் இல்லாத காரணத்தினாலும் அரசாணை எண் 181ன் படி ஆண்டு குத்தகை இனங்களை நிதியாண்டின் அடிப்படையில் குத்தகைக்கு விடப்பட வேண்டும் என்பதாலும், மேற்படி குத்தகை இனத்திற்கு நடப்பு நிதியாண்டில் 31 மார்ச் 2024 வரை குத்தகை உரிமம் நீட்டிப்பு செய்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

2.மேற்படி குத்தகை உரிமத்திற்கு கடைசி வருடத்திற்கு பெறப்பட்ட வாடகையில் 5% உயர்வு செய்து 31 மார்ச் 2024 மாதம் வரைக்கும் குத்தகை தொகை நிர்ணயிக்கவும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

3.குத்தகை இனத்திற்கு 1.4.2024 ம் தேதி முதல் மூன்றாண்டு கால அளவு என்ற ஒரு தொகுப்பு காலத்திற்கு பொது ஏலம் உடன் ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றம் அனுமதிக்கலாம்.

4.குத்தகை இனத்திற்கு உரிய குத்தகை தொகையினை வசூல் செய்யவும் நிதியிழப்பை தவிர்க்கும் பொருட்டு எதிர்வரும் நகர்மன்ற அனுமதி எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **663, நாள். 16.02.2024** |
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண் – 31)**

இந்நகராட்சியின் புதிய பேருந்து நிலையத்தில் உள்ள கட்டண கழிப்பறைக்கு 2.11.2020 முதல் 30.11.2023 வரை ஆண்டு குத்தகைக்கு உரிமம் வழங்கப்பட்டுள்ளது. திரு.ஜே.தனராஜ் த.பெ. டி.ஜெயக்குமார் குத்தகைதாரர் கொரோனா ஊரடங்கு காலங்களில் கட்டண கழிப்பறை பூட்டி வைக்கப்பட்டிருந்த காரணத்தினால் நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக விவரம் தெரிவித்து மார்ச் மாதம் வரை (31.03.2024) குத்தகை உரிமத்தை நீட்டிப்பு செய்து வழங்க கோரியுள்ளார்.மேற்படி குத்தகை இனத்திற்கு அருகாமையில் புதியதாக நவீன கட்டண கழிப்பறை கட்டப்பட்டு கட்டிடபணிகள் முடிவடையும் தருவாயில் உள்ளது.மேலும் பழைய கட்டண கழிப்பறையை இடித்து விட்டு மாற்று ஏற்பாடு செய்ய உத்தேசிக்கப்பட்டதாலும் புதிய கட்டண கழிப்பறை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரும் வரையில் பொது மக்களின் நலன் கருதியும் உள்ளூர் , வெளியூர் பயணிகள் மற்றும் சுற்றுலாப்பயனிகள் பயன்படுத்தும் பகுதி என்பதால் 31.03.2024 வரை குத்தகை உரிமத்தை நீட்டிப்பு செய்ய மன்றத்தின் அனுமதி பெற மேலான ஒப்புதலுக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** : 1. மன்றம் அனுமதிக்கலாம்

2.மேற்படி குத்தகை உரிமத்தினை புதியதாக கட்டப்பட்டுள்ள நவீன் கட்டண கழிப்பறை பயன்பாட்டிற்கு கொண்டுவரும் வரையில் பொதுமக்களின் நலன் கருதி 31.03.2024 வரை காலநீட்டிப்பு செய்யவும் கடைசி வருடத்திற்கு பெறப்பட்ட வாடகையில் 5% உயர்வு செய்து குத்தகை தொகை நிர்ணயிக்கவும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

3.குத்தகை இனத்திற்கு 1.4.2024 ம் தேதி முதல் மூன்றாண்டு கால அளவு என்ற ஒரு தொகுப்பு காலத்திற்கு பொது ஏலம் உடன் ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றம் அனுமதிக்கலாம்.

4.குத்தகை இனத்திற்கு உரிய குத்தகை தொகையினை வசூல் செய்யவும் நிதியிழப்பை தவிர்க்கும் பொருட்டு எதிர்வரும் நகர்மன்ற அனுமதி எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **664, நாள். 16.02.2024** |
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண் – 32)**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 24 வார்டுகளிலும் சுற்றி திரியும் தெரு நாய்களை கணக்கெடுப்பு பணி மேற்கொள்ளவும் கருத்தடை அறுவை சிகிச்சை மேற்கொண்டு தடுப்பூசி போடவும், அதற்கு தேவையான உபகரணங்கள் வாங்கிடவும் வேண்டியுள்ளது. ஏற்கனவே நகர்மன்றத்தீர்மானம் எண்.109 நாள்.24.06.2022ல் கொடைக்கானல் கால்நடை பாதுகாப்பு அமைப்பு (KSPCA) மூலம் இப்பணி மேற்கொள்ளப்பட்டது. அரசாணை எண்.(4D)01 கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை நாள்.17.03.2023ன்படியும், நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் ந.க.20383/2022/எச்1 நாள்.07.09.2023 சுற்றறிக்கையின்படியும் ரூ.1650/- மாற்றம் செய்யப்பட்டுள்ளது. எனவே 2024-2025ஆம் ஆண்டிற்கான 24 வார்டுகளிலும் சுற்றி திரியும் தெரு நாய்களை கணக்கெடுப்பு பணி மேற்கொள்ளவும், ஓராண்டிற்கு உபரகணங்கள் வாங்கிடவும், இதற்கான உத்தேச செலவினத் தொகை ரூ.9.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. கொடைக்கானல் கால்நடை பாதுகாப்பு அமைப்பு (KSPCA) மூலம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.762/2022/எச்1)

| | |
|---|---|
| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **665, நாள். 16.02.2024** |
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண் – 33)**

கொடைக்கானல் நகராட்சி பொது சுகாதார பிரிவு – கொடைக்கானல் நகராட்சியில் டெங்கு மற்றும் கொசுவின் மூலம் பரவும் இதர வைரஸ் காய்ச்சல் தடுப்பு நடவடிக்கையாக 30 கொசுபுழு ஒழிப்பு பணியாளர்களை வீதம் தினந்தோறும் வீடு வீடாக சென்று கொசுப் புழு ஒழிப்பு பணியை மேற்கொண்டு வருகின்றனர்.அதன் தொடர் நடவடிக்கையாக கொடைக்கானல் நகராட்சி பகுதிகளில் உள்ள பள்ளி, கல்லூரி நிறுவனங்கள், நகராட்சி பகுதியில் உள்ள வார்டுகள், பொது மக்கள் கூடும் இடங்களில் தினந்தோறும் நிலவேம்பு கசாயம் காய்ச்சி வழங்க வேண்டி உள்ளதால் நிலவேம்பு கசாயம் வழங்கும் பாத்திரம் 10 லிட்டரில் 8 எண்ணமும் 20 லிட்டரில் 2 எண்ணமும் வாங்கி நிலவேம்பு குடிநீர் வழங்கப்பட்டு வருகின்றது. பொது சுகாதார அவசர அவசியம் கருதி நிலவேம்பு கசாயம் வழங்கும் பாத்திரங்கள் வாங்கிய செலவுத் தொகை ரூ.67200/- இந்நகராட்சி சுகாதார ஆய்வாளர் திரு.D.அலெக்ஸாண்டர் என்பவரால் செலவினம் மேற்கொள்ளப்பட்டது மேற்காணும் செலவினத் தொகை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.138/2024/எச்1)

| | |
|---|---|
| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **666, நாள். 16.02.2024** |
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண் – 34)**

கொடைக்கானல் நகராட்சி தமிழகத்தின் தலை சிறந்த சுற்றுலா தளங்களில் முக்கியமான ஸ்தலமாக உள்ளதால் நாளொன்றுக்கு 30,000 முதல் 50, 000 வரையிலான சுற்றுலா பயணிகள் வந்து செல்கின்றனர். இந்நிலையில் முழு ஆண்டு தேர்வு விடுமுறைக் காலங்களில் ஏப்ரல் 2024 முதல் ஜீன் 2024 வரை நாளொன்றுக்கு சுமார் 1,00,000 –க்கும் அதிகமான சுற்றுலா பயணிகள் வருகை புரிவதால் நகரின் அனைத்து பகுதியிலும் உள்ள சுற்றுலா பகுதிகள், பேருந்து நிலையம் தற்காலிக பேருந்து நிலையங்கள் , வணிக நிறுவனங்கள் , திடக்கழிவு அதிக அளவில் சேகரமாகும் மையங்கள் மற்றும் பொதுக் கழிப்பிடங்கள் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் பொது சுகாதார தூய்மைப் பணிகள் மற்றும் தொற்று நோய் பரவாமல் இருக்க சீசன் காலங்களில் ஏப்ரல் 2024 முதல் ஜீன் 2024-ம் மாதங்களில் கூடுதலாக கிருமிநாசினிகள் தேவைப்படுகிறது. அதன் விவரம்.

1. பிளீச்சிங் பவுடர் -15 மெட்ரிக் டன்
2. நீர்த்த சுண்ணாம்பு பவுடர் – 30 மெட்ரிக் டன்

மேற்குறிப்பிட்ட விவரப்படி கிருமிநாசினிகளை வாங்கி வழங்கிட தோராயமாக செலவு ரூ.9,90,000 –க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. அவசர அவசியம் கருதி நாடாளுமன்றத் தேர்தல் 2024 தேர்தல் விதிமுறைகளை எதிர்நோக்கி குறுகியகால ஒப்பந்தப்புள்ளி பெற்று பணிகளை மேற்கொள்ளவும் அதற்கான செலவினத் தொகையை வழங்கிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.(ந.க.எண்.0141/2024/எச்1)

| | |
|---|---|
| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **667, நாள். 16.02.2024** |
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண் – 35)**

இந்நகராட்சி உரக்கிடங்கில் உருவாகும் RDF கழிவுகளை அரியலூர் சிமெண்ட்தொழிற்சாலைக்கு கொண்டு செல்லும் பணியை செய்து வரும் DM Solution என்ற நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட பணி உத்திரவு 09.03.2024ம்தேதியுடன் முடிய உள்ளதால், தற்போது பணிமேற்கொண்டு வரும் மேற்காணும் நிறுவனத்திற்கு அதே விலைவிகிதத்தில் 6 மாதகாலத்திற்கு பணிநீட்டிப்பு செய்தும், அதற்காகும் செலவினத் தொகை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.875/2023/எச்1)

| | |
|---|---|
| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **668, நாள். 16.02.2024** |
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண் – 36)**

கொடைக்கானல் நகராட்சி பொது சுகாதாரம் – இந்நகராட்சியானது சர்வதேச சுற்றுலாதளம் என்பதால் இந்நகராட்சி கோடைகால வாழிடம் என்பதால் இந்நகராட்சிக்கு சுற்றுலா பயணிகள், பொது மக்கள் மற்றும் அதனை சார்ந்த வியாபாரிகள் அதிக அளவில் வந்து செல்கின்றனர். மேலும் இந்நகராட்சிக்கு எல்லைக்குட்பட்ட பகுதியில் கோக்கர்ஸ் வாக், பிரையண்ட் பார்க் , நட்சத்திர ஏரி , பசுமை பள்ளதாக்கு, வட்டகானல், வட்டகானல் அருவி, லிரில் அருவி, குறிஞ்சி ஆண்டவர் கோயில், ரோஸ் கார்டன், வெள்ளி நீர் வீழ்ச்சி, சிட்டி வீயு, எனவே மேற்கண்ட பகுதிகளில் உள்ள பொது மற்றும் சமுதாய கழிப்பறைகளை சுத்தம் செய்யவும், மற்றும் பொது மக்கள் அதிகமாக கூடும் இடங்களிலும் தொற்று நீக்கம் செய்யவும், தற்போது லெமன் கிராஸ் கிருமி நாசினி போதிய கையிருப்பு இல்லாத காரணத்தினாலும் எதிர்வரும் கோடைகால பருவ காலத்தினை கருத்தில் கொண்டும் லெமன் கிராஸ் கிருமி நாசினி 300 லிட்டர் அளவில் பொது சுகாதார அவசர அவசியத்தினை கருத்தில் கொண்டு வாங்கி வழங்கிட அதற்க்கான உத்தேச செலவினம் ரூ.9,50,000 /- ஆகும். மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. அவசர அவசியம் கருதி நாடாளுமன்றத் தேர்தல் 2024 தேர்தல் விதிமுறைகளை எதிர்நோக்கி குறுகியகால ஒப்பந்தப்புள்ளி பெற்று பணிகளை மேற்கொள்ளவும் அதற்கான செலவினத் தொகையை வழங்கிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.146/2024/எச்1)

| | |
|---|---|
| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **669, நாள். 16.02.2024** |
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண் – 37)**

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவு எல்லைக்குட்பட்ட பகுதியில் திடக்கழிவு மேலாண்மை திட்ட பணிகளை மேற்கொள்வதற்கும், தூய்மை இந்தியா திட்ட பணிகள் – பொது சுகாதாரப் பணிகளுக்கும் டெங்கு காய்ச்சல் மற்றும் பிற வைரஸ் காய்ச்சல் பரவுதலை தடுக்கும் பணிகளுக்கு தேவையான கிருமிநாசினிகளான பிளிச்சிங் பவுடர், நீர்த்த சுண்ணாம்பு பவுடர் போன்றவை தற்போது நகராட்சி இருப்பில் போதுமான அளவில் இல்லாததால் கீழ்குறிப்பிட்ட விவரப்படி கிருமி நாசினிகள் வாங்கி வழங்கிட

| | | |
|---|---|---|
| 1. பீளிச்சிங் பவுடர் | 15 | மெட்ரிக் டன் |
| 2. நீர்த்த சுண்ணாம்பு பவுடர் | 30 | மெட்ரிக் டன் |

மேற்குறிப்பிட்ட விவரப்படி கிருமிநாசினிகள் வாங்கி வழங்கிட தோராயமாக செலவின ரூ.9.90இலட்சம் (ரூபாய் ஒன்பது இலட்சத்தி தொண்ணூறு ஆயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி நாடாளுமன்றத் தேர்தல் 2024 தேர்தல் விதிமுறைகளை எதிர்நோக்கி குறுகியகால ஒப்பந்தப்புள்ளி பெற்று பணிகளை மேற்கொள்ளவும் அதற்கான செலவினத் தொகையை வழங்கிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.142/2024/எச்1)

| | |
|---|---|
| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **670, நாள். 16.02.2024** |
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

*******

